# முன்னாள் அமைச்சரின் வீட்டில் ஆயுதங்கள் மீட்பு

விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 30 இதழ் 285
யாழ்ப்பாணம் புதன்கிழமை 16-11-1994

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் திரு. விஜேயபால மெண்டிஸ் வீட்டில் திடீர் சோதனை மேற்கொண்ட நீர்கொழும்பு பொலிஸார் கண்ணீர் புகை அடைசகப்பட்ட கலங்களையும், ஆயுதங்களையும், வெடி மருந்துகளையும் கண்டெடுத்துள்ளார்கள்.

தமக்கு கிடைத்த இரகசிய தகவலைபடுத்து நீர்கொழும்பு நீதவானிடம் தேடுதல் ஆணையை பெற்று பொலிஸார் இந்த நடவடிக்கையை மேற்கொண்டார்கள்,

தொடராக சுடக்கூடிய இருதுப்பாக்கிகள், இரண்டு சாதாரண துப்பாக்கிகள் 23

(6-ம் பக்கம் பார்க்க)

## நாட்டை விட்டு உடுகம்பொல வெளியேற தடை

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரேமதாஸா உடுகம்பொலவை நாட்டை விட்டு வெளியேற வேண்டாமென அரசு அறிவித்துள்ளது

இவருடன் சேர்ந்து திட்ட அமுலாக்கல் அமைச்சின் முன்னாள் செயலாளரான டாக்டர் விக்கிரம வீரசூரியாவையும் நாட்டை விட்டுச் செல்ல வேண்டாமெனவும் அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

சம்பந்தப்பட்ட இருவர் மீது இப்போது விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதன் காரணமாகவே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## தொண்டா விவகாரம் உட்பட

# அமைச்சரவை மாற்றம் குறித்து ஜனாதிபதிக்கு பலத்த எதிர்ப்பு

## செல்லச்சாமியும் கண்டனம்

[கொழும்பு]

ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவின் அமைச்சரவையில் குறிப்பிடத்தக்கஅளவு பாரிய மாற்றங்கள் செய்யப்படாதபோதும் அதில் மேற்கொள்ளப்பட்ட சிலமாற்றங்கள் குறித்து ஜனாதிபதிக்கு பல துறையினரும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

முக்கியமாக திரு. எஸ். தொண்டமானுக்கு அமைச்சர் பதவி வழங்கி அவரை அமைச்சரவையில் சேர்த்துக் கொண்டது பொதுசன ஐக்கிய முன்னணிஅரசுக்குள்ளேயேபலத்த எதிர்ப்பைக் கிளப்பியுள்ளதாம்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவைப்பெறுவிட்டாலும் பொதுசன ஐக்கிய முன்னணிக்கு கடந்த ஜனாதிபதித்தேர்தலில் தேவையானஅளவு வாக்குகள்கிடைத்திருக்கும் என தெரிவிக்கப்பட்டது.

தொண்டமான் பொதுசன ஐக்கிய முன்னணி அரசில் ஓர் அமைச்சர் பதவியை வகிப்பதற்குத் தகுதியற்றவர் என

(6-ம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீமாவோ பிரதமரானதால் பெரிய சிக்கல் தீர்ந்தது

(கொழும்பு)

பொதுசன முன்னணி அரசின் பிரதமர் பதவி தமக்கே கிடைக்கும் என ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பலர் எதிர் பார்த்திருந்தனர்.

(6-ம் பக்கம் பார்க்க)

## லயனல் பெர்ணாண்டோ விரைவில் ராஜினாமா

(கொழும்பு)

தகவல் தொடர்பு அமைச்சின் செயலரும், லேக்கவுஸ் பத்திரிகை நிறுவனத்தின் தலைவருமான திரு. லயனல் பெர்ணாண்டோ இப்பதவிகளிலிருந்து ராஜினாமா செய்யவுள்ளார்.

இதற்கான தமது ராஜினாமா கடிதத்தையும் அவர் சமர்ப்பித்துள்ளராம்.

(6ம் பக்கம் பார்க்க)

## ஹமில்டன், பிராங் டி சில்வா விரைவில் பதவி விலகுவர்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வணசிங்கா, பொலிஸ் மா அதிபர் பிராங் டி சில்வா ஆகியோர் பதவி நீக்கம் செய்யப்படவுள்ளனர்.

இவர்களின் பதவிகளுக்கு புதியவர்கள் விரைவில் நியமிக்கப்படவுள்ளனர். மேலும் முப்படைகளின் உயர்மட்டங்களில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஊழல், மற்றும் துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டபடையினரின் பதவிகளும் மாற்றம்

[6ம் பக்கம் பார்க்க]

## கிளாலி பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று புதன்கிழமை வழமையான நேரத்துக்கு நடைபெறுமென விடுதலைப்புலிகள் அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## அரசு-புலிகள் பேச்சு குறித்து அடுத்த வாரம் ஆலோசனை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான சிறிலங்கா அரசு தரப்பு பிரதிநிதிகளின் இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அடுத்த வாரம் ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளார்.

இரண்டாம் கட்டப் பேச்சுக்களின் போது இடம்பெறவுள்ள விடயங்கள் பேச்சுக்கள் நடைபெறும் திகதி என்ன இவ் ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும்.

யாழ்ப்பாணத்து நிலைமைகள் குறித்தும் இதில் ஆராயப்படும் என அரச அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## ஆனுராவுக்கு வெளிநாட்டு தூதுவர் பதவி வழங்கப்படும்

(கொழும்பு)

திரு. அனுரா பண்டாரநாயக்காவிற்கு வெளிநாட்டு தூதுவர் பதவியை வழங்க ஜனாதிபதி திருமதி சந்திரிகா ஆலோசித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

திரு. அனுரா இலங்கையிலிருந்தால் தனது அரசுக்கு பிரச்னைகள் ஏற்படுத்திக் கொண்டிருப்பார். அதனை

(6ம் பக்கம் பார்க்க)

## அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில்

# 'மினி பட்ஜட்' சமர்ப்பிக்க புதிய அரசாங்கம் முடிவு!

(கொழும்பு)

பொதுசன ஐக்கிய முன்னணி அரசு சிறிய அளவிலான வரவுசெலவுத்திட்டம் ஒன்றை அடுத்த வாரம் சமர்ப்பிக்கவுள்ளது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இந்த 'மினிபட்ஜெட்' நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

புதிய அரசாங்கம் கடைப் பிடிக்கவுள்ள புதிய பொருளாதாரக் கொள்கையும் இந்த வரவு செலவுத் திட்டத்துடன் இணைத்து வெளியிடப்படும் என அரசுவட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஆகஸ்ட் மாதம் 16ம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று

(5-ம் பக்கம் பார்க்க)

## தீவுப்பகுதிக்குச் சென்ற கிராம சேவையாளர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்

(மானிப்பாய்)

தீவுப்பகுதிக்கு தமதுகடமைகளைப்பொறுப்பேற்கச் சென்ற சுமார் 27 கிராமசேவை உத்தியோகத்தர்கள் திருகோணமலையில் வைத்து சில தமிழ்க் குழுக்களினால் திருப்பி அனுப்பப்பட்டனர்.

யாழ். மாவட்டத்தில் அண்மையில் புதிதாக நியமனம் பெற்ற இக்கிராம சேவையாளர்கள் அனைவரையும் தீவுப்பகுதியிலுள்ள வேலணை புங்குடுதீவு நயினாதீவு போன்ற இடங்களுக்குச் சென்று பணி

(6-ம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

**C 90 விற்பனைக்கு**

நல்ல தரமான H A2 90 மோட்டார் சைக்கிள், ஆர்மோனியம், வில்லுவண்டில், கரத்தைவண்டில் விற்பனைக்கு உண்டு தொடர்பு:- மோட்டார் சைக்கிள் தங்கப்பழம், வழக்கம்பரை, வண்டில் ஆர்மோனியம், தொடர்பு: ந. சிவசண்முகமூர்த்தி, தொல்புரம். (சி-1316)

உடன் விற்பனைக்கு உண்டு

டச்சு ரோட் 1-ம் ஒழுங்கை சாவகச்சேரி - வடக்கு சாவகச்சேரி என்னும் இடத்தில் 5 பரப்புக் காணி நல்ல தண்ணீர் கிணற்றுடன், மா, தென்னை மரங்களுடன் விற்பனைக்குண்டு, தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:. S. கந்தசாமி, சட்டத்தரணி, சாவகச்சேரி. (சி-1310)


## இன்று

0 0

(பண்டத்தரிப்பு)

யாழ். அரசினர் மபாதனை வைத்தியசாலை வளாகத்து ஸ்ரீசாமுண்டிதேவி சம்மத சிவஞான வைரவ சுவாமி ஆலய நவோத்திரசத சங்காபிஷேகம் இன்று 16ம் திகதி புதன் கிழமை நடைபெறள்ளது.

-72

0 0

(வேலணை)

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் அசிரியர் கிளைச்சங்க அங்கத்தவர்களுக்கான கூட்டமொன்று இன்று 16ம் திகதி புதன்கிழமை பி. ப. 3மணிக்கு சுன்னும் கந்தரோடை தமிழ் கந்தையா மாவித்தியாலயத்தில் மாகாண ஆணையாளர் திரு. நா. போஷன் தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

-75

0 0

(யாழ்ப்பாணம்)

கடந்த சித்திரை மாதம் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்காக ''ஆயுதப்போரட்ட சூழ்நிலையில் சிறுவர்களுக்கு ''உதவுதல்'' ஏன்பதைக் கருப்பொருளாகக் கொண்டு நடாத்தப்பட்ட பயிற்சியில் பங்குபற்றியவர்களுக்கு அதன் தொடர்ச்சியாக ஒரு நாள் பயிற்சி வகுப்பு இன்று 16ம் தேதி காலை 8-30 மணி முதல் மாலை 4 மணிவரை யாழ். நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# இனப்பிரச்சினையை தீர்க்க சந்திரிகா துணிச்சலுடன் இறங்கவேண்டும்

(கொழும்பு)

இந்த நாடு பல இன, பல சமய மக்களைக்கொண்ட நாடு. இந்த நாட்டின் செல்வம் சகல மக்களுக்கும் சமமாக பகிர்ந்து பிரயோக்க உரிந்துடையது என்பதை நடந்துமுடிந்த ஜனதிபதித் தேர்தலும், திருமதி சந்திரிகாவின் வெற்றியும் எடுத்துக் காட்டுவதாக ''சண்டே ரைம்ஸ்'' தனது ஆசிரிய தலையங்கத்தில் எழுதியுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

திருமதி சந்திரிகா வுக்கு அமோக வரவேற்பை சிங்கள மக்கள் கொடுத்த அதே வேளை, தமிழ், முஸ்லிம் சிறுபான்மை மக்களும் அபரிதமான ஆதரவை அள்ளிக் கொடுத்துள்ளனர். கிழசகு மாகாணத்தில் 90 வீதத்தையும், மத்திய மலையகத்தில், கொழும்பில் வாழும் சிறுபான்மை தமிழ் மக்கள் தவகள் அமோக ஆதரவைத் தெரிவித்ததும் கண்கூடு.

இந்தத் தேர்தலில் தனக்குக் கிடைத்த அமோக வெற்றி, இனவாத அரசியலை மக்கள் முற்றுக நிராகரித்துள்ளதை எடுத்துக் காட்டுவதாக திருமதி சந்திரிகா, தான் வெற்றியீட்டிய பின் தெரிவித்துள்ளார்.

திருமதி சந்திரிகா தனது தாய், தந்தையரிலும் பார்க்க அபூர்வமாக - எதிர்பாராத வெற்றியீட்டி உச்சாணியில் உயர்ந்துள்ளார்.

சர்வ வல்லமையுள்ள ஜனதிபதி முறையை நீக்கல், ஊழலை ஒழித்தல், இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணுதல் என்னும் மூன்று முக்கிய காரணங்களை வைத்து தேர்தலில் பிரசாரம் செய்து வெற்றியும் ஈட்டிவிட்டார். இனித் தயங்காது இவைகளை நடைமுறைப்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கையில் இறங்குவதே சரி.

ஐ. தே. க., திரு. காமினி திசநாயக்காவின் கொலையை அடுத்து, அவரின் மனைவியை தேர்தலில் நிறுத்தி அனுதாப வாக்குகளைப் பெற முனைந்தது. ஆனல் இலங்கை மக்கள் முன்னைய அனுபவத்தைக் கருத்தில் கொண்டு. கட்சிகள் செய்த சாதனை, கொள்கைகளுக்கே வாக்களித்து தீர்ப்பு வழங்கினர். 60 வருட காலத்தில் வாக்களிக்கும் உரிமையை இம்முறையே செம்மையாகப் பயனபடுத்தியுள்ளனர்.

வங்குரோத்துக் கொள்கையைப் பயன்படுத்தி ஐ. தே. க, அதிகாரத்தைப் பிடிக்க இனவாதத்தைக் கிளப்பியது. 1983ம் ஆண்டுக் கலவரத்தின புண்கள் ஆறுதவகையில் இப்போதும் தமிழர் உளர். ஐ. தே. க. வேட்பாளர் வென்ருல் இனக்கலவரம் மீண்டும் வெடிக்கலாம் என தமிழர் அஞ்சினர். ஆனல் நாட்டில் தமிழ்பேசும் மக்கள் சந்திரிகாவுக்கே வாக்களித்தனர்.

இப்போது திருமதி சந்திரிகா, இதுவரை துன்ப துயரில் வாழும் வடபகுதி மக்களின் அடிப்படைத் தேவையான உணவு, உடை, பாதுகாப்பு, வேலைவாய்ப்பு, ஆகியவற்றேடு மின்சாரம், நீர்விநியோகம், போக்குவரத்து பாதைகள் சீர்செய்தல் ஆகியவற்றையும் உடன் கவனத்தில் எடுத்தல் மிக அவசியம்.

அவர் பெற்ற அமோக ஆதரவைக் கொண்டு நாட்டில் சமாதானம் நீதியை நிலை நிறுத்த வேண்டும் எனவும் அதில் மேலும் தெரிவிக்கப பட்டுள்ளது. (கே சி)

## கிணற்றில் விழுந்து வயோதிபர் மரணம்

(சாவகச்சேரி)

நுணுவில் கிழக்குப் பகுதியில் 93 வயதுடைய வயோதிபர் ஒருவர் கண்பார்வை இழந்த நிலையில் தவறுலாகக் கிணற்றில் விழுந்து பலியாகியுள்ளார்.

இச்சம்பவம் கடந்த திங்கள் சாவகச்சேரியில நிகழ்ந்துள்ளது, இவ்வாறு கிணற்றில் விழுந்து பலியானவர் எஸ். கணபதிப்பிள்ளை என்பவர் ஆவார். 155 சி


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


சமாதான முயற்சி வெற்றிபெற்ருல்

## ஸ்கன்டிநேவிய நாடுகள் ரூ 10,000 கோடி வழங்கும்

[கொழும்பு[

அரசு-புலிகள் சமாதான பேச்சுவார்த்தைகள் வெற்றியளிக்கும் பட்சத்தில் வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் புனர் நிர்மாண அபிவிருத்தி வேலைகளுக்கு 10,000 கோடி ரூபாவை ஸ்கன்டிநேவிய நாடுகள் வழங்கவிருக்கிறது என்று 'ராவய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

வடக்கு-கிழக்கில் எவ்வளவு விரைவில் சமாதானம் தோன்றுகின்றது என்பதை பொறுத்தே அந்த நாடுகள் இந்த நிதியை இலங்கைக்கு வழங்கவுள்ளனவாம். மசி

## சீன ஆயுத நிறுவனம் இலங்கையில் அமையும்

(கொழும்பு)

யுத்த தளபாடங்கள் திருத்துவதற்கு ஒரு தொழிற்சாலையையும், களஞ்சிய அறையையும் ஏற்படுத்துவதற்கு சீன ஆயுத விற்பனவு நிறுவனம் ஒன்று நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று 'லக்பீம' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் கடந்த அரசாங்க காலத்தில் இடம்பெற்றதென்றும் சீனுவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஆயுதங்கள் இந்த தொழிற்சாலை மூலம் திருத்தப்பட திட்டமிட்டிருப்பதாகவும் இந்தத் தொழிற்சாலை காலியில அல்லது திருகோணமலையில் நிறுவப்படலாம் என்றும் லக்பீம மேலும் தெரிவித்துள்ளது. (ம-சி)

## பரிசில் வழங்கல்



குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரால் குரும்பசிட்டி கிராமத்திலிருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படுபவர்களிற்கு வழங்கப்படும் அமரர் த. இராசரத்தினம் ஞாபகார்த்த புலமைப்பரிசிலை செல்வி சோபிதா சிவசோதிக்கு இராமநாதன் கல்லூரி முன்னுள் அதிபர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் வழங்குவதையும் அருகில் சபைத் தலைவர் தி. குகானந்தன் நிற்பதையும் காண்க.

(சி-1315)


யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

**விசேட பொதுச் சபைக் கூட்டம்**

-0-0-0-0-0-0-0-0-0-0-0-0-0-0-0-0-0-0-

06 - 12 - 1994 செவ்வாய்க்கிழமை
முற்பகல் 10-00 மணி

சகல பொதுச் சபை உறுப்பினர்களுக்குமான

**அறிவித்தல்**

மேற்படி சங்கத்தின் விசேட பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் 06-12-94 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு கோண்டாவிலில் உள்ள சங்க மண்டபத்தில் நடைபெறும்.

சங்கத்தின் கிளைக்குழுக்களாகிய

01. யாழ்ப்பாணம் கிளை
02. சுன்னுகம் கிளை
03. நெல்லியடிக் கிளை
04. வேலணைக் கிளை
05. சித்தங்கேணிக் கிளை
06. சாவகச்சேரிக் கிளை

ஆகிய கிளைகளின் பொதுச்சபை உறுப்பினர்களை தவருது சமூகம் தரும்படி வேண்டுகின்ருேம்.

★ நிகழ்ச்சி நிரல் காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும்.

ஃ முக்கிய நிகழ்ச்சியாக தமிழாக்கம் செய்யப்பட்ட உப விதி திருத்த அங்கீகாரத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

தலைவர், செயலாளர்.

முகவரி:
யாழ். மாவட்ட
புடவை நெசவாளர்
கூட்டுறவுச் சங்கம்,
இருபாலை வீதி,
கோண்டாவில்.

15 - 11 - 94. (ஏ-4502)

# மீண்டும் பொதுத் தேர்தல் நடத்தும் சாத்தியமில்லை

## பீரிஸ் கூறுகிறார்

(கொழும்பு)

கடந்த வாரம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் மக்களின் அமோக ஆதரவு கிடைக்கப்பெற்றதினை அடுத்து திருமதி சந்திரிகா குமாரணதுங்க உடனடியாக நாடாளுமன்ற தேர்தல் ஒன்றினை நடத்தும் உத்தேசத்தைக் கைவிட்டுள்ளார். எனினும் அறிவிக்கப்பட்ட கொள்கைகள் அனைத்தும் நடைமுறைப்படுத்தப்படும்.

இவ்வாறு நீதியமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலை சர்வ அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கு நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பாகவே பொதுசன முன்னணி அரசு கருதுகிறது. எதிரணி வேட்பாளரிலும் பார்க்க சுமார் 20 லட்சம் வாக்குகளையும், மொத்தமாக 62.28 வீத வாக்குகளையும் திருமதி சந்திரிகா பெற்றது ஒரு பெரும் சாதனையாகும்.

தற்பாதைய அரசியல் யாப்புப்படி ஜனாதிபதி தேர்தல் நடந்து ஒரு வருடம் கழிந்த பின்னரே நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியும். எனினும் நாடாளுமன்றத்தை கலைக்குமாறு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினால் ஜனாதிபதி அதனை நிறைவேற்றலாம்.

இதேவேளை சர்வ அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை மாற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குவேண்டும் என சட்டமா அதிபர் கூறியுள்ளார்.

இதற்கு ஐ. தே. க.வின் ஆதரவை பொதுசன முன்னணி கோரும். இல்லையேல் பிறிதொரு கருத்துக் கணிப்பு வரும் ஜூலைக்கிடையில் நடைபெறலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (கே சி)

# வெடிகுண்டுத் தாக்குதலை

## நடத்துவோரை தேடும் பொலிஸார்

[கொழும்பு]

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் வெடிகுண்டுத் தாக்குதலை நடாத்தும் நபர்கள் இருக்கிறார்களா எனத் தேடும் முயற்சியில் பொலிசார் தீவிரமாக இறங்கியுள்ளதாக 'சண்டே ஒப்சேவர்' தெரிவித்துள்ளது.

இதற்காகபெருமளவு படையினர் தினமும் கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலுமுள்ள வீடுகள், லொட்ஜ்கள் மற்றும் ஹோட்டல்களில் தேடுதல் நடாத்தி வருகிறார்களாம்.

காமினியைக் கொன்ற பெண்ணெனச் சந்தேகிக்கப்படுபவரை இதுவரை அடையாளம் காணமுடியாததால் இதுபற்றி பொலிசார் தொடர்ந்தும் புலன் விசாரணைகள் நடாத்தி வருகிறார்கள்.

இதேவேளை காமினியின் கொலை விசாரணைகளுக்காக விஷேடமாக நூறு பொலிசார் அமர்த்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (சி)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரியின்வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 9-30 மணிக்கு யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் தலைமை நடைபெறவுள்ளது.

இவ்வைபவத்தில் மன்னார் ஆயர் ஆர். ஜோசேப் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார். -வி

## ஜனாதிபதித் தேர்தலில் மோசடி

# ஐ. தே. க. முறைப்பாடு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் மோசடிகள் நடைபெற்றதாகக்கூறி ஐ. தே. கவினர் முறைப்பாடு செய்யவுள்ளதாக தெரிவிககப்படுகிறது.

கடந்த ஜனாதிபதி தேர்தல் காலத்தில் பொ. ச. மு வினர் காடைத்தனம், பயமுறுத்தல் ரூபவாஹினியை அரசு சார்பு பிரசாரத்திற்கு ஈடுபடுத்தியமை என்பன உட்பட பல குற்றச்சாட்டுகள் இந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இது குறித்து ஐ. தே, கவின் வழக்கறிஞர்கள் முறைப்பாடுகளை தயாரித்துவருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. [சி]

## திருத்தம்

(யாழ்ப்பாணம்)

15.11.1994 பிரசுரிக்கப்பட்ட தமிழீழ மீட்பு நிதி மீளளிப்புத் தொடர்பான தொடர்பு இலக்கத்தில் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் புரட்டாதி மாதத்திற்குரிய இலக்கம் யா[சா,4687 க்குப் பதிலாக யா|சா/4688 என தவறுகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது இதனை யா சா 4687 எனத் திருத்தி வாசிக்கவும்.

# மாவீரர் எழுச்சிவார கூட்டங்கள். சிரமதானங்கள்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் நாளையொட்டி யாழ். மாவட்டத்தில் இன்று 16-ம் திகதி நடைபெறும் சிரமதானங்கள் வருமாறு: மூளாய் 2, 3, 5 பாதை அமைத்தல், 2, 3 துப்பரவு செய்தல், கொக்குவில் இந்து மயானத்தில் வீதி. பாதை திருத்துதல். கைதடி மேற்கு ஊரியான் வீதி திருத்தம். வல்வெட்டி வெள்ள வாய்க்காலில் வெள்ளம் தேங்காமல் செய்தல்.

தீவகக்கோட்டம் சார்பாக பூம்புகார் நக்கீரன் குடியிருப்பு, அரியாலை டயஸ் குடியிருப்பு, அரியாலை மணியரசன் குடியிருப்பு, அரியாலை சாம்சன் குடியிருப்பு துப்பரவு செய்தல், துரவுகள் நிரப்புதல்.

வலிகாமம் கோட்டத்தில் மருதனார்மடம் சந்தி, கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் சாவகச்சேரிக் கோட்டத்தில் பொதுவகமைதானம் துப்பரவு செய்தல், பருத்தித்துறை கிராமக்கோட்டுச் சந்தி துப்பரவு செய்தல்.

கூட்டங்கள்:, சுண்டுக்குளி வடக்கு சனசமூக நிலையம், யாழ். மாவீரர் சனசமூகநிலையம், ஆவரங்கால் சர்வோதயம் சந்தி, சிறுப்பிட்டி ஜனசக்தி ச. ச, நிலையம், கோண்டாவில் நாராயணன் ச.ச.நி, கோண்டாவில் சிறிகணேச ச. ச. நி, நவாலி மதியொளி ச. ச. நி. சண்டிலிப்பாய் நந்தன் ச. ச, நி, தாவடி சிறீ காளி அம்மன் ச. ச. நி, தாவடி மத்திய ச. ச. நி ஆகிய இனைங்களில் இரவு 7-30 மணிக்கும்.

பண்டத்தரிப்பு கலைவாணி ச. ச. நிலையம், சங்கானை சிறிபாரதி ச. ச. நி ஆகியவற்றில் இரவு 7-30 மணிக்கும். பளை முல்லையடி மாவீரர் பாடசாலை, மந்துவில் மரக்கள சனசமூகநிலையம், சாவகச்சேரி சித்தி விநாயகர் கலாமன்றம் அப்பச்சி மாவடி, நாவற்குழி அருள்வீதி ச, ச. நிலையம் ஆகியவற்றில் இரவு 7 மணிக்கும்,

டயஸ் நக்கீரர் குடியிருப்பு, மணியரசன் சாம்சன் குடியிருப்பு ஆகியவற்றில் 7-30 மணிக்கும் சிரமதானக் கூட்டங்களும் வீதி நாடகங்களும் இடம்பெறும், (ம-சி)

# தொண்டா மீது

## ஒழுங்கு நடவடிக்கை

(கொழும்பு)

அமைச்சர் தொண்டமானுக்கு எதிராக ஐ. தே. க. விரைவில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவுள்ளது.

ஐ. தே. க.வின் தேசிய பட்டியல்மூலம் எம் பி.யான திரு. தொண்டமான் தற்போது கட்சி மாறி பொ. ச. மு. அமைச்சராக பதவியேற்றுள்ளதை எதிர்த்தே அவர் மீது இந்த ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதுகுறித்து ஐ. தே. க. இந்த வாரம் முடிவு செய்யும் என ஐ. தே. க. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (சி)

## இராசி பலன்

16 - 11 - 1994

புதன்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி-30)

அச்சுவினி ந. இ 12-07 வரை, திரயோதசி மு.ப. 8-45 வரை, இராகுகாலம் நண்பகல் 12-07 முதல் 1-37 வரை, சுபநேரம் மாலை 4-37 முதல் 6-07 வரை, மரண யோகம்.

மேடம்: கடித தொடர்பு, தாமதவெற்றி, சகவாசம்.

இடபம்: முறுகல்நிலை, வயிற்றில் ரோகம், மனவேதனை.

மிதுனம்: பெரியோர் ஆசி, நல்லதருணம், பணவரவு.

கடகம்: பிதா ஆணை, காரிய சித்தி, பயணம்.

சிங்கம்: வாய்ப்பின்மை, தொழில் நஷ்டம், அலைச்சல்.

கன்னி: தேவையற்ற பகை, குடும்பகவலை, முரண்பாடு.

துலாம்; முயற்சி பலிதம், விருந்துவைபவம், பாராட்டு.

விருச்சிகம்: நினைத்ததைச் சாதித்தல், மனமகிழ்ச்சி, தெய்வீகப்பணி.

தனுசு: எதிர்பாராத துயர், பொருள் இழப்பு, வாக்குப் பகை.

மகரம்: அதிகாரிகள்சினம், ஒதுங்கிப்போதல், வைத்திய செலவு.

கும்பம்: சுபகாரியம், உறவினர் பெருமை, புரியாதபுதிர்.

மீனம்; கோள்சொல்லுதல், பணமுடை, பயனற்ற செய்கை.

— ஜோஸ்யர்

# சந்திரிகாவின் இடத்திற்கு புதியவர் நியமனம்

(கொழும்பு)

திருமதி சந்திரிகா ஜனாதிபதியாவதற்கு தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினமா செய்ததால் அவரது இடத்திற்கு திரு. பந்துகபிய டயஸ் பண்டாரநாயக்கா என்பவர் நியமிக்கப்படவுள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் இவரே திருமதி சந்திரிகாவுக்கு அடுத்தபடியாக கூடுதலான விருப்பு வாக்குகளை பெற்றிருந்தமையால் சந்திரிகாவின்இடத்திற்கு இவர் நியமிக்கப்படவுள்ளார்.

இதேவேளை விபத்தில் உயிரிழந்த புத்தளம் மாவட்ட எம். பி. திரு. கோட்பிறே பெர்னாண்டோவின் இடத்திற்கு திரு. ஜோன் பீரிஸ் என்பவர் நியமிக்கப்படவுள்ளார். (சி)

★ சந்திரிகாவிடமிருந்து

## வாக்குமூலம் பெறும் அதிகாரம்

# லஞ்ச ஆணையாளருக்கு இல்லை

(கொழும்பு)

திருமதி சந்திரிகாவுக்கு பல கோடி ரூபா லஞ்சம் கொடுக்க முற்பட்டதாக கூறும் குற்றச்சாட்டு குறித்து ஜனாதிபதி சந்திரிகாவிடமிருந்து வாக்குமூலத்தை பெறும் அதிகாரம்லஞ்ச ஆணையாளர் திணைக்களத்திற்கு இல்லை என பொலிஸ் உயர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனினும் அத்திணைக்களத்தைச் சேர்ந்தவர்களை அழைத்து முறைப்பாட்டை ஜனாதிபதி சந்திரிகா தெரிவிக்கலாம் எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

திருமதி சந்திரிகா பிரதமராக இருந்தபோது மேற்படி குற்றச்சாட்டு குறித்து வாக்குமூலமளிக்க திகதி ஒன்றைத் தருமாறு லஞ்ச ஆணையாளர் சந்திரிகாவிடம் கேட்டிருந்தார். ஆனால் ஜனாதிபதியாக திருமதி சந்திரிகா வந்தமையால் இந்த நடவடிக்கை எடுக்க முடியாமல் போவதாக லஞ்ச திணைக்கள பொலிஸ் அத்தியட்சகர் ரின்ஸிபெரேரா தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசியலமைப்புப்படி லஞ்சத் திணைக்கள அதிகாரிகள் நாட்டின் ஜனாதிபதியிடம் வாக்குமூலம் பெறும் உரிமை கிடையாது. ஆனாலும் ஜனாதிபதி இத்திணைக்களத்தாரை தானகவே அழைத்து தனது வாக்குமூலத்தைக் கொடுக்கலாம்.

தமக்கு லஞ்சம் கொடுக்க முன்வந்ததாக கூறப்படும் இரு வர்த்தகர்களின் பெயரையும் திருமதி சந்திரிகா இதுவரை வெளியிடவில்லை. அந்தநேரத்தில் பிரதமர் அலுவலகம் இது குறித்து பூரவாங்க விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டுமென லஞ்ச ஆணையாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தது.

திருமதி சந்திரிகாவிடமிருந்து மேற்படி இரு வர்த்தகர்களினதும் பெயர் விபரம் கிடைக்கும்வரை இதுதொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்க முடியாதெனவும் லஞ்ச ஆணையாளர் திருமதி நெலும் கமகே கூறியுள்ளதாக 'சண்டே லீடர்' தெரிவித்துள்ளது. (சி)

ARE THESE YOUR NEEDS?

From this year the Statistics Branch of the Tamil Eelam Economic Development Organisation has expanded their activities in a large scale.

(1) Surveys regarding a village for those interested in the development of this Village.

(2) Surveys on a particular social section.

(3) Surveys on consumer Satisfaction on a particular product.

Could be provided with consultancy service for undertaking such surveys, or could undertake a complete survey and provide you a survey report the Statistics Branch of the Tamil Eelam Economic Development Organisation with consultants who have many years of experience in this field are now available for such services. In addition, we supply required statistics for-

★ Research personnels for writing research reports.
★ University students.
★ School Teachers, Students and Others.
★ We are also in a position to prepare and provide survey reports on required subject to Government and Non Government Social Service Organisation.

For Further information, please contact

STATISTICS BRANCH
TAMIL EELAM ECONOMIC
DEVELOPMENT ORGANISATION,
Thavady. [A4499]

# தமிழீழ [illegible]ட்புநிதி கடன் மீளளிப்பு

(நேற்றைய தொடர்ச்சி)

**ஐப்பசி – 1994**

நல்லூர்
யா/ந
414 1105 1478 2553
3374 3483 4745 5198
5331 5408

யாழ்ப்பாணம்
யா/யா
54 267 423 447 508
584 1497 2323 2337
3854

கோப்பாய்
யா/கோ
28 124 257 278 405
938 3552 5341

உடுவில்
யா/உ
921 2227 2954 3181

மானிப்பாய்
யா/மா
320 753 799 801 854
893 3792

தெல்லிப்பளை
யா/தெ
06 93 312 441 490
628 782 2794

சங்கானை
யா/ச
42 91 209 745 1346
3045 3259 4168 4623

காரைநகர்
யா/கா/
104 741

வேலணை
யா வே
95 134 742 959 1576

கரவெட்டி
யா/க
48 65 70 393 443 569
718 2208 3427 4563

பருத்தித்துறை
யா/பரு
13 60 99 179 352 598
959 991

வடமராட்சி கிழக்கு
யா வ.கி
424 531

சாவகச்சேரி
யா சா
19 294 366 477 807
1634 1895 2505 2573
2846 3045 5466 6448

பச்சிலைப்பள்ளி
கி/ப
539

வெளியகல்வு
யா/வெ
16 09 411

**கார்த்திகை – 1994**

நல்லூர்
யா/ந
71 478 546 865 1145
1975 2334 3055 3677
5636

யாழ்ப்பாணம்
யா யா
08 624 646 887 946
1767 2072 2590 3270
3349

கோப்பாய்
யா/கோ
55 145 197 312 514
557 3276 6019

உடுவில்
யா/உ
22 388 479 598

மானிப்பாய்
யா/மா
19 137 437 718
2733 3247 3759

தெல்லிப்பளை
யா/தெ
201 1589 1695 2062
3259 3402 4146 4268

சங்கானை
யா/ச
06 303 374 375 2435
3273 3698 4459 4574

காரைநகர்
யா/கா
470 649

வேலணை
யா/வே
410 539 557 1890 1920

கரவெட்டி
யா/ க/
248 473 543 600 1084
2892 2932 3659 4034
4782

பருத்தித்துறை
யா/பரு/
77 338 421 549 1213
2318 2642 4271

வடமராட்சி கிழக்கு
யா/வா/கி
99 332

சாவகச்சேரி
யா/சா/
164 282 427 2323 2375
2742 2924 3522 3630
3667 5526 5923 6370

பச்சிலைப்பள்ளி
கி/ப/
38

வெளியகல்வு
யா/வெ
56 348 904

# சர்வஜன வாக்கெடுப்பின்றி
## அரசியலமைப்பை திருத்த முடியாது
### ரணில் கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

அரசியலமைப்பை திருத்தம் செய்வதற்கு மக்களிடம் ஆணை கோரி ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு வெற்றியடைந்த சந்திரிகா குமாரணதுங்க புதிதாக மக்களிடம் ஒரு சர்வசன வாக்கெடுப்பு எடுக்காமல், அரசியலமைப்பைத் திருத்தமுடியாது என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க 'லங்காதீப'வுக்கு தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கம் அரசியலமைப்பை திருத்துவதற்கு, நாடாளுமன்றில் 2/3 பங்கு பெரும்பான்மை பெறவேண்டும். இந்தத் திருத்தத்துக்கு தமது கட்சி ஆதரவு அளிப்பது பற்றி இதுவரை தீர்மானம் எதுவும் மேற்கொள்ளவில்லை என்றும் ரணில் தெரிவித்தார்.

இதேவேளை அரசியலமைப்பை திருத்துவது பற்றி பொதுசன ஐக்கிய முன்னணியின் யோசனைகள், எதிர்வரும் 24ம் திகதி நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம்

(5-ம் பக்கம் பார்க்க)


யாழ்ப்பாண மாநகரசபை

## கழிவுகள் அகற்றல்
தொடர்பான

# அறிவித்தல்

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலுள்ள குடிமனைகள், உணவகங்கள், மற்றும் ஸ்தாபனங்களிலுள்ள மலக்குழிக் கழிவுகள், மற்றும் திரவக் கழிவு போன்றவற்றைக் காலத்துக்குக்காலம் அகற்றுவதற்கு வசதியாக எம்மால் கழிவு அகற்றும் வாகனம் ஒன்று உருவாக்கப்பட்டு, சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. அதேபோன்று, வளவினுள் பாரிய அளவில் சேரும் குப்பை கூழங்களையும் அகற்றுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இச்சேவைகளுக்கென சிறிய அளவிலான கட்டணம் அறவிடப்படும்.

நல்லூரில் அமைந்துள்ள சபையின் பிரதான அலுவலகத்தின் வாகனப்பிரிவு அத்தியட்சகருடனோ, அல்லது பொதுசனத் தொடர்பு அதிகாரியுடனோ இவ்வாறான சேவைகள் பெற விரும்புவோர் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
94 - 11 - 14.

(ஏ-4500)



**இன்று** புதன்கிழமை வெளிவருகின்றது........

## விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமும், நிதர்சனமும்
இணைந்து வழங்கும்
திரைப்படப் பிரிவின் தயாரிப்பில் உருவான

# ★ "பிஞ்சுமனம்" ★

(முழு நீள வண்ணப்படம்)

படப்பிடிப்பு, ஃ எழிலன்
படத்தொகுப்பு, ஃ சேகர்
பாடல்கள் ஃ புதுவை இரத்தினதுரை
இசை ராஜன்ஸ் இசைக்குழு

கதை, திரைக்கதை, வசனம், இயக்குதல்
ந. கேசவராஜன்

இது ஒரு திரைப்படப் பிரிவின் வெளியீடு

## மன்னார் மாவட்ட கலை, பண்பாட்டுக் கழகம்
வழங்கும்

# "எல்லைக்கற்கள்"

[முழு நீள வண்ணச் சித்திரம்]

திரைக்கதை, வசனம், நா. லோகேந்திரநாதன்
இசை, மோ. சொலமன்ராஜ்
நெறியாள்கை அ. அன்ரன்

இது முற்றுமுழுதாகவே எழில் கொஞ்சும் மன்னாரில் வளங்களைக் கொண்டு உருவாக்கம் பெற்ற வண்ணச் சித்திரம்

## விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் உருவாக்கிய
கடற்புலிகளின் வெளியீடான

# "கடற்கரும்புலிகள்" "கடலின் மடியில்"

(இரு வீடியோ ஒளி நாடாக்கள்)

★ இவை கடற் கரும்புலிகளினதும், கடற்புலிகளினதும் ஈகத்தையும் வீரத்தையும் கொண்டு உருவாக்கம் பெற்றவை ★

★ புதன்கிழமை பி. ப. 4 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டப வெளியீட்டு விழாவோடு தமிழீழம் எங்கும் உலா வருகின்றன.

ஃ காணவும் கேட்கவும் தவறாதீர்கள் ஃ

(ஏ-4497)

நூலகம் யாழ்ப்பாணம்

### மணிவாக்கு

இடர்படும் ஆணையானது ஈவருக இருந்தால் மகன் தந்தையையும் அமைச்சன் அரசனையும் சற்றும் தயங்காது எதிர்க்கலாம்.

- கன்பூசியஸ்

## நமது நோக்கு

### நல்லெண்ண சமிக்ஞை

இராணுவ நடவடிக்கைகளைத் தலைவர் பிரபா ஒரு வாரகாலம் இடைநிறுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமராக இருந்த சந்திரிகா அமைதிக்கான பேச்சுவார்த்தைகளுக் ஆரம்ப நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்தார்.

ஜனாதிபதித் தேர்தற் பிரசாரத்தின் போது காமினி கொலையுண்டதும் பேச்சுவார்த்தைகளுக்கு முற்றுப்புள்ளி என்று முதற்கூறினர்கள்.

சிலவேளை அது தொடருமா எனச் சில அரசியல் அவதானிகள் கேள்விக் குறி போட்டார்கள்.

கொலையினால் ஏற்பட்ட கோப அலையினால் மக்கள் கொதிப்படைத்திருப்பார்கள் என எண்ணிக் கொண்டு பேச்சுவார்த்தை கைவிடப்பட்டது என்று தான் முதலிற் செய்தி வந்தது

அலை சற்றுத் தணிந்த பின் பேச்சுவார்த்தை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது என்ற செய்திகள் மெல்லத் தலைகாட்டத் தொடங்கின.

இதனிடையே எண் சோதிடக்காரரோ இரண்டாம் எண்ணிற் பிறந்தவர்கள் நிலையான கொள்கையோடு இருக்கமாட்டார்கள் என்று கூட அவசரப்பட்டு ஆருடம் கூறத் தொடங்கி விட்டார்கள்.

ஆனால் தேர்தலின் இறுதிக்கட்டப் பிரசாரத்தின் போது சந்திரிகா சமாதானம் பற்றி உறுதிபடப் பேசியதும் மக்கள் அலை அவர் பக்கம் திரும்பியதையே கண்டோம்!

அவரே எதிர்பார்க்காத அளவிற்கு சமாதானத்திற்கு மக்கள் வாக்களித்தது கேள்விக்குறியை வியப்புக்குறியாக்கியது!

இந்தப் பின்னணியில் சந்திரிகா ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றதும் நல்லெண்ண சமிக்ஞை இங்கிருந்து சென்றது பொருத்தமானதே.

என்னவோ ஏதோ வென்று ஏங்கியிருந்தோர் தேசியத்தலைவரின் இந்த அறிவிப்பையிட்டு அவரின் சாணக்கியத்தையிட்டு மகிழ்ச்சியடைவர்.

அமைச்சரவையில் மீண்டும் பாதுகாப்புப் பிரதி அமைச்சராகக் கடமை ஏற்ற ரத்வத்தை உடனடியாகவே இதுபற்றிக் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

இதனை வரவேற்றதோடு அரசும் போர்நிறுத்தம் மேற்கொள்ளத் தயார் என்று பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தது கவனத்திற்குரியதே[

# ஜே. ஆரின் அன்றைய கூற்று நாட்டை சுடுகாடாக்கிவிட்டது

(கொழும்பு)

''போர் என்றால் போர்- சமாதானம் என்றால் சமாதானம் என்று நிறைவேற்று அதிகாரங்களைகொண்ட இலங்கையின் முதலாவது ஜனாதிபதியான திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன இறுமாப்பாக அன்று கூறிய கருத்தின் பிரதிபலனையே இன்று முழு நாடும் அனுபவித்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. அவரது கூற்றால் நாடு இன்று சுடுகாடாகிவிட்டது.''

இவ்வாறு வெடிகுண்டினால் பலியான காமினி திசநாயக்காவின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக அவரது இல்லத்துக்கு வெளியே நின்ற சிங்கள முதியவர் ஒருவரிடம் பத்திரிகையாளர் பேட்டி கண்டபோது மேற்கண்டவாறு கூறினர்.

அந்த வயோதிபர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில்: காமினி திசநாயக்கா ஓர் இளம் அரசியல் தலைவர். அவரது மறைவு ஒரு பேரிழப்பாகும். அவரது மறைவுக்கு விடுதலைப் புலிகளே பொறுப்பாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த இயக்கம் இக்கொலையில் சம்பந்தப்பட்டிருக்கலாம் அல்லது சம்பந்தப்படாதிருக்கலாம் ஆயினும் அந்த இயக்கம் ஒரு பலம் வாய்ந்த ஆயுதப் போராட்ட இயக்கம் என்பதை எவருமே மறுக்க முடியாது.

கடந்த காலங்களில் அவர்கள் வெளிப்படையாகவே பல இராணுவ ரீதியிலான தாக்குதல்களை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளார்கள். அவர்களிடம் சகதிமிக்க ஆயுதங்கள், மற்றும் வெடிப் பொருட்கள் உண்டு என்பதனை அனைவரும் நன்கு அறிவர்.

இந்த நிலையில் விடுதலைப் புலிகளுடன் தொடர்ந்தும் மோதலில் குதித்து பகையை வளர்த்துக்கொள்வதை விடச் சமாதானப் பேச்சுகளை நடாத்தி இந்த நாட்டில் உறுதியான ஒரு அமைதியை ஏற்படுத்தவேண்டும். புதிய அரசின் விடுதலைப் புலிகளுடனான சமரச முயற்சிகள் தொடர வேண்டும என்பதையே நாம் தற்போது விரும்புகின்றோம்'' என்றும் கூறினர். (வி-சி)

### பலதும் பத்தும்

**இரகசியமா?**

அமெரிக்காவின் C.I.A, F.B.I. ஆகிய உளவு நிறுவனங்கள் பற்றித் தெரிந்திருக்கும் ஆனால்... N. S. A. (National Safety Agency) பற்றித் தெரியுமோ? இது எவரது இரகசியத்தையும் 'லபக்' என அறிந்து விடுமாம்! எப்படி...?

'கிளிப்பர் சிப்ஸ்' என்ற பெயருள்ள கடத்தியைத் தொலைபேசி, கணனி, FAX ஆகியவற்றில் பொருத்தி விட்டால், அந்தரங்கம்... அம்பலம்!

பயங்கரவாதிகள் போதைப் பொருள் கடத்துபவர், பிறநாட்டு உளவாளிகள் ஆகியோரின் இரகசியங்களை அறியத்தான் சட்டப்படி N.S.A. இயங்குகிறது.

ஆனால்.. தனிமனிதர்கள் இரகசியம் பேணும் சுதந்திரம் பாதிக்கப்படுவதாக மக்கள் இதனை எதிர்க்கிறார்களாம்!

— மயூரன்

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994—11—16**
**புதன் இரவு**

08-01 குயிலோசை- நிகழ்ச்சியில் சு. அரசனுை எழுதிய ''பைந்தமிழீழத்து பனைவளம்'' கிராமிய நிகழ்வு.
08-10 ஏர்முனை
08-30 செய்திகள்
08.40 நாடகம்- மலரன்னை எழுதிய ''தரிசனம்''
09-00 இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

**1994—11—17**
**வியாழன் காலை**

07-02 மாவீரவணக்கம்
07-15 விடுதலை கீதங்கள்
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச்செய்திகள்
07-40 விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி
08-00 காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

### அடுத்த வாரம்

[1ம் பக்கத் தொடர்ச்சி[

பதவிக்கு வந்த புதிய அரசு முழுமையான வரவு செலவுத் திட்டம் ஒன்றை சமர்ப்பிப்பதைவிட இந்த வருடத்துக்குத் தேவையான செலவினங்களை சமர்ப்பிக்க இந்த மினிவரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க முடிவு செய்துள்ளது.

இந்த மினி பட்ஜெட் சம்பந்தமான விவாதத்தை நாடாளுமன்றத்தில் நடத்துவதற்கு நான்கு நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

1995-ம் ஆண்டுக்கான முழுமையான வரவு செலவுத் திட்டம் ஒன்று எதிர்வரும் ஜனவரி மாதம் அல்லது பெப்ரவரி மாதம் புதிய அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும். இரி

## சமஷ்டி தீர்வில் 'பிரபா' ஆட்சி புரிவதை இந்தியா விரும்பவில்லையாம்

[கொழும்பு]

இலங்கையில் ஒரு சமஷ்டி ஆட்சி வந்து அதில் திரு. பிரபாகரன் ஆட்சிபுரிவதை இந்தியா விரும்பவில்லை. இலங்கை அரசு இவர்களுக்கு என்ன வழங்குகிறது என்பதனை இந்தியாவின உளவுப் பிரிவான 'றோ' இதனை உன்னிப்பாக அவதானிப்பதாக 'சண்டே லீடரில்' தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது,

திரு காமினி திசநாயக்காவின் கொலையையடுத்து இந்திய உளவுப் பிரிவான 'றோ' பாலத்துறையில் எடுத்த தடயங்களையும் விபரங்களையும் ஆராய்ந்ததோடு அவ்விடத்தில் எடுத்த வீடியோ படத்தை பத்துமுறை பார்த்து துருவித்துருவி ஆராய்ந்தது.

இந்தியப் பிரதமர் நரசிம்மராவுக்கு அனுப்பிய அறிக்கையில், திரு. காமினி திசநாயக்காவுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு போதாமை பற்றியும் றோ தெரிவித்திருந்தது.

றோவின் செயலர் திரு. அவ்ரார் சிவ் சியாலி, திரு. காமினி கொலையுண்ட ஒரு சில நிமிடங்களில் அந்த தகவலைப் பெற்றதோடு உடன் அமைச்சரவை காரியதரிசி திரு. கரேந்திரா சிங்சிற்கும் அதனை அறிவித்திருந்தார்.

இதனையடுத்து மறுநாள் அமைச்சரவைக் காரியாலயத்தில் 'றோ' அதிகாரிகள் வெளியுறவு சிரேஷ்ட அதிகாரிகள், புலனாய்வுத்துறையினர் மற்றும் இராணுவ புலனாய்வாளர்கள் கூடி ஆராய்ந்தனர்.

இலங்கை விவகாரங்களில் வெளியுறவு அதிகாரிகளுடன் 'றோ' அளவுக்கதிகமாக தலையிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை விவகாரங்களில் முக்கியமாக திருமதி சந்திரிகா குமாரதுங்க விடுதலைப் புலிகளுடன் எவ்வகையில் சீர்வை மேற்கொள்கிறார் என்பதனையும் இந்தியா அவதானிக்கிறது. ஆகவே புலிகளுடன் ஒரு உடன்பாடு ஏற்படும் போது இதனை கருத்தில் கொள்ள வேண்டுமெனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கே சி

## இலங்கையில் அரசியல் தலைவர்களின் பாதுகாப்பிற்கு அமெரிக்க உதவி நாடப்பட்டது

(கொழும்பு)

இலங்கையில் ஏற்பட்டு வரும் பாதுகாப்புப்பிரச்சினைக்கு தீர்வுகாணும்முகமாக, ஐக்கிய அமெரிக்காவிடம் இலங்கை, தங்கள் உள்ளூர் காவல் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியும் தரமுயர்வும் அளிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த வேண்டுகோள் திரு. ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது விடுக்கப்பட்டு அதனடிப்படையில், இலங்கை ஜனாதிபதி பிரதமர் மற்றும் முக்கிய அரச உத்தியோகத்தர்களுக்கு காவல் பாதுகாப்பு வழங்கும் இலங்கை காதுகாப்பு அதிகாரிகளுக்கு பயிற்சி வழங்க அமெரிக்க பாதுகாப்பு நிலையங்கள் முன்வந்தன.

இதனடிப்படையில் இலங்கையில் எவ்வாறு முக்கிய பிரமுகர்களுக்கு காவல் பாதுகாப்பு வழங்கப்படுகிறது என்பது பற்றி ஆராய அமெரிக்காவிலிருந்து இலங்கை வந்த நிபுணர் ஒருவா 30 நாட்கள் ஆய்வு மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்.

அவரது ஆய்வில் பிரதமருக்கு பாதுகாப்பு வழங்கும் பிரிவு, பொலிஸ் விசேடபிரிவு, அமைச்சர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பிரிவு மற்றும் விசேட அதிரடிப்படை, நாடாளுமன்ற பொலிஸ் ஆகியனவும் அடங்கியிருந்தன.

இந்த ஆய்வு அறிக்கையில் முக்கிய அரச அதிகாரிகளுக்கு எவ்வாறு காவல் பாதுகாப்பு வழங்கவேண்டும் எனவும் தெரிவிககப்பட்டுள்ளது.

கே-சி

## சமாதானப் பேச்சை அரசு துரிதப்படுத்த வேண்டும்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் அண்மையில் நடத்திய சமாதானப் பேச்சுக்களை துரிதப்படுத்த வேண்டும் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேண்டிக்கொண்டுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் பொது செயலாளரும் பிரதித் தலைவருமான ஜனாப் றுவ் ஹகிம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: சமாதான முயற்சிக்கு ஏதுவாக முன்னுதாரணங்கள் கண்டறியப்பட்டதோடு ஆராயப்பட்டுமுள்ளன. ஆனால்முக்கிய பிரச்னை பற்றி முதலில் கண்டறியப்பட்டு அதை எவ்வாறு சுமுகமாக தீர்க்கலாம் என்பதனை ஆராயவேண்டும்.

அரசியல் யாப்பை அடுத்த ஆண்டு யூன் மாதத்தில் திருத்த முதல் விடுதலைப் புலிகளிடமிருந்து தீர்க்கமான முடிவைப் பெற வேண்டும். அரசியல் யாப்பை திருத்த முற்படமுன் வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கும் தீர்வு காணவேண்டும். அதிகாரப் பகிர்வு பற்றி செம்மையாக அரசியல் யாப்புத் திருத்தத்தில் இடம்பெறவேண்டும். இந்தத் திருத்தத்தில் இதனைச் சேர்க்காதுவிட்டால் இன்னொரு முறை திருத்தம் கொண்டுவர வேண்டி ஏற்படும் இது கஷ்டமான விடயமாகும் என்றும் கூறினர். -கே-சி

### சர்வஜன

[4ம் பக்கத் தொடர்ச்சி[

சமர்ப்பிக்கப்பட இருப்பதாக வெளிநாட்டு வர்த்தக, நீதி அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார் என்று 'லங்காதீப' பத்திரிகை தெரிவித்துள்ளது. ம-சி

**பணம் கொட்டிக் குவிக்கும் பனையை தினம் நட்டுச் செழிப்போம்**

# ரூபவாஹினி வசந்தராஜா விரைவில் ராஜினமா செய்வார்

(கொழும்பு)

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத் தலைவர் வசந்தராஜா விரைவில் பதவியில் இருந்து ராஜினமா செய்யக் கூடும் என்று 'லக்பிம' பத்திரிகை தெரிவித்துள்ளது.

வசந்தராஜா கூட்டுத்தாபனத் தலைவர் பதவிக்கு நியமனம் பெற்ற பின்பு, ரூபவாஹினியில் இடம் பெற்ற நிகழ்ச்சிகள் சம்பந்தமாகப் பத்திரிகையாளர் மத்தியில் கருத்து பேதம் ஏற்பட்டுள்ளது.

இதனல் கூட்டுத்தாபனத் தலைவர் பதவியைத் துறக்கப் போகும் அவர், ஜனதிபதியின் தகவல் ஆலோசகராக நியமிக்கப்படலாம் என்று 'லக்பிம' மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை ரூபவாஹினி கூட்டுத்தாபன தலைவராக திரு. வசந்தராஜாவை போட்டதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. ஜனதிபதி சந்திரிகாவிற்கு மிக நெருங்கியவர்களும் இந்த நியமனத்தில் பலத்த கருத்து வேறுபாடு கொண்டுள்ளதாக 'சண்டே ரைம்ஸ்' தெரிவித்துள்ளது.

திருமதி சந்திரிகாவின் அழைப்பை ஏற்று இலங்கை வந்து ரூபவாஹினியின் தலைவராக பதவியேற்ற திரு. வசந்தராஜாவை அப் பதவியிலிருந்து உடனடியாக நீக்காவிடின் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கப்போவதாக ரூபவாஹினி கூட்டுத்தாபன ஊழியர்கள் அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

# மாவீரர் எழுச்சி வாரம் நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் எழுச்சி வாரம் நேற்று ஆரம்பமானது மக்கள் அனைவரும் உணர்வு பூர்வமாக மாவீரர் எழுச்சி வார நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

மாவீரர்களை நினைவு கூரும் நிகழ்வுகள் சிரமதானங்கள். உட்பட பல பொதுப்பணிகளும் மாவீரர் எழுச்சி வாரத்தையொட்டி நேற்று மேற்கொள்ளப்பட்டன.

மாவீரர் நினைவு வளைவுகள், சிகரங்கள் மாவீரர் திருவுருவப் படங்கள் வீதிகள் மற்றும் பொது இடங்களில அமைக்கப்பட்டுள்ளதுடன் மாவீரர் வாசகங்களும் பதாகைகள் மூலம் பறக்கவிடப்பட்டுள்ளன.

சனசமூக நிலையங்கள், பொதுஇடங்கள்பாடசாலைகள் மற்றும் பொது அமைப்புகள் யாவும் மாவீரர் வாரத்தை அனுஷ்டிக்கும் வண்ணம் மாவீரர்களின் படங்கள் வைக்கப்பட்டு எழுச்சிவாரம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. (ரி)

# சிறிசேன குரே மீண்டும் தீவிர அரசியலுக்கு பிரவேசம்

[கொழும்பு]

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னுள் செயலாளரான சிறிசேன குரே மீண்டும் தீவிர அரசியலில் பிரவேசிக்க இருப்பதாக 'லக்பிம' பத்திரிகை தெரிவித்துள்ளது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐக்கி தேசியக் கட்சியின் வருடாந்த மாநாட்டின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியில் திரு. குரேக்கு உயர் தலைமைப் பதவி ஒன்று வழங்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளறு

திரு. காமினிதிசநாயக்க ஐக்கியதேசியக் கட்சியின் தலைமைப் பதவிக்கு வந்தபின்னர், திரு. குரே கட்சியிலிருந்து ஓரம் கட்டப்பட்டார்.

எனினும் திரு. ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக அவர் திரைமறைவிலிருந்து வெகு தீவிரமாகச் செயற்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது என்றும் 'லக்பிம' தெரிவித்துள்ளது. -இ

## ஹமில்டன்

[1ம் பக்கத் தொடர்ச்சி[

செய்யப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்பு அமைச்சு ஜனதிபதி சந்திரிகா பொறுப்பிலுள்ளதால் விரைவில் இம்மாற்றங்கள் நிகழலாமெனஎதிர்பார்க்கப்படுகிறது. சி-ரி

கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்பு

# புலனய்வுப் பிரிவினர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்பில் காணப்பட்ட தடையங்களுடன் ஸ்கொட்லண்ட்யாட் சென்ற இலங்கை புலனய்வுப் பிரிவைச் சேர்ந்த துப்பறியும் வல்லுனர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

குருதி மற்றும் வேறு பொருட்கள் அதி தீவிர பரிசோதனை செய்வதற்காக ஸ்கொட்லண்ட் யாட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அந்த பரிசோதனைகளை கொழும்பில் மேற்கொள்ளதார். ஏற்ற வசதிகள் இல்லாமையினலேயே இந்த ஏற்பாடு செய்யப்பட்டது.

ஸ்கொட்லண்ட் யாட் பரிசோதனையின் முடிவை பார்த்து எவ்வகையான விசாரணைகளை மேற்கொள்வது என்பது தீர்மானிக்கப்படவுள்ளதாக புலனய்வுப்பிரிவு அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கை தமக்கு வெகு விரைவில் கிடைக்கவுள்ளதாகம் அவர் மேலும் தெரிவித்தார். கே

# பட்டப்பகல் வேளையில் 15 000 ரூபா இருட்டு

(நெல்லியடி)

பட்டப்பகல்வேளை வீட்டின் முன்வாசலில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தமோட்டார்சயிக்கிளிலிருந்து சுமார் 15ஆயிரம் ரூபா பணமும், கல்குலேற்றரும், கணக்குக் கொப்பிகளும் இனந்தெரியாதோரினல் சூறையாடிச் செல்லப்பட்டுள்ளது.

இத்துணிகர திருட்டுச் சம்பவம் நேற்று நண்பகல் 12 மணியளவில் புலோலி தெற்கு சாரையடியில் விஜயகுமார் வீதியில் நிகழ்ந்துள்ளது.

இத்திருட்டுத் தொடர்பாக கந்தையா சவுந்தரராசன் என்பவர் பருத்தித்துறை காவல் பணிமனையில் முறையிட்டுள்ளார். (160-ரி)

## லயனல்

(1-ம் பக்கத்தொடர்ச்சி]

தமது அமைச்சிலும் லேக்கவுஸ் பத்திரிகை நிறுவனத்திலும் திருமதி சந்திரிகா பிரதமராக இருந்தபோது அவரது அலுவலகத்தை சேர்ந்த அதிகாரிகள் மேற்கொண்ட தலையீட்டினலேயே திரு. லயனல் பெர்ணண்டோ தமது ராஜினமா கடிதத்தை சமர்ப்பித்துள்ளாராம். சி-ரி

அனர்த்தங்களுக்கான அபிவிருத்தி

# திட்டங்களை இனம் காண 3 நாள் ஆய்வுப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

நாட்டின் அனர்த்தங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை இனங்கண்டு அவற்றை நடைமுறைப்படுத்தும் நோக்குடன், இன்று 16ம் திகதி தொடக்கம் 18ம் திகதி வரையான மூன்று நாள் ஆய்வுப் பட்டறை ஒன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளை அரச திணைக்களங்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து மேற்கொண்டுள்ளன.

இன்று காலை 8-30மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் திட்டப் பணிப்பாளர் திரு. செ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள ஆரம்ப நிகழ்வில், துறைசார் நிபுணர்களும், கல்விமான்களும் கலந்துகொண்டு சிறப்பிக்கும் இவ்ஆய்வுப் பட்டறையின் முதலாது அமர்வில், விவசாயம், விலங்கு வேளாண்மை, சூழல், கடல் வளம், கைத்தொழில் ஆகிய துறைகளிலும் நாளை இரண்டாவது அமர்வில் பொருளாதார உட்கட்டுமான துறை மற்றும் சேவைகள் தொடர்பாகவும் நாளை மறுதினம் மூன்ருவது அமர்வில் சமூக உட்கட்டுமானம் ஆகிய துறைகளிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. ரி

# கனடா தூதுவராக ரணசிங்க நியமனம்?

[கொழும்பு]

அண்மையில் நடைபெற்ற ஜனதிபதி தேர்தலில் போட்டியிட்ட திரு. ஏ. ஜே. ரணசிங்கா ஜனதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்காவினல் கனடாதூதுவராக நியமிக்கப்படலாம் எனத் தெரியவருகிறது.

ஜனதிபதி தேர்தல் காலத்தில் திரு. ரணசிங்க தமக்கு ஆதரவாக செயற்பட்டமைக்காக அவருக்கு நன்றி தெரிவிக்கும் நோக்குடனே இந்நியமனம் ஜனதிபதியினல் வழங்கப்படவுள்ளது.

ஜனதிபதி தேர்தலின்போது திருமதி சந்திரிகாவின் ரோஸ் மீட்பிளேஸிலுள்ள இல்லத்தில் வைத்து திரு. ரணசிங்காவின் தேர்தல் விளம்பரங்கள் சந்திரிகாவின் சகோதரியின் முன்னுள் கணவர் திரு. உதயா நாணயக்காராவினல் தயாரிக்கப்பட்டதுகுறிப்பிடத்தக்கது. [சி-ரி]

## அனுராவுக்கு

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தவிர்ப்பதற்கே அவருக்கு இப்பதவியை வழங்கி வெளிநாட்டில் அவரை வசிக்கச் செய்வதற்கு சந்திரிகா ஆலோசித்து வருகிருராம்.

பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் ஆலோசனையின் பேரிலே அனுராவுக்கு இப்பதவியை வழங்க ஜனதிபதி திட்டமிட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (சி - ரி)

# போர் நிறுத்தத்திற்கு அரசு பதிலளிக்க வேண்டு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் அறிவித்துள்ள போர் நிறுத்தத்திற்கு அரசு முறைப்படி பதிலளிக்கவேண்டும் என புளொட்தலைவர் த. சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

அரசு தொடங்கியுள்ள அமைதி பேச்சுவார்த்தையை புலிகள் தொடர விரும்புவதையே போர்நிறுத்தம் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ரி

## ஸ்ரீமாவோ

(1 ம் பக்கத்தொடர்ச்சி)

ஆனல் அந்தப்பதவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் கைகளுக்குப்போய்விட்டது. பொதுசன முன்னணி அரசிலுள்ளவர்களுக்கு ஒரு மன ஆறுதலைக் கொடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது, இதனல் கட்சிக்குள் ஏற்படவிருந்த பெரியதொரு சிக்கல் தவிர்க்கப்பட்டதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளையில் திரு. அமரசிறி தொடங்கொடவின் பொறுப்பில் இருந்த உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு வேறு ஒருவருக்கு வழங்கப்பட்டதால்தென்பகுதியிலுள்ள அமைப்புக்கள் பல தமது எதிர்ப்பைத் தெரிவித்து ஜனதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்காவுக்கு கடிதங்கள் அனுப்பிவைத்துள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன. இரி

## தொண்டா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. எம். எஸ். செல்லச்சாமி தெரிவித்துள்ளார்.

திரு. தொண்டமானை பொதுசன ஐக்கிய முன்னணி அரசு சேர்த்துக்கொண்டதன் விளைவுகள் வெகுவிரைவில் அம்பலத்துக்கு வந்துவிடும். அவர் இந்த அரசில் இணைந்து கொண்டதால் எனக்கு எந்த விதமான நெருக்கடியும் ஏற்படாது எனவும் திரு. செல்லச்சாமி மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## தீவுப்பகுதிக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புரியுமாறு வடக்கு கிழக்கு மாகாண சபையின் உயர் துறை அமைச்சு நியமனக் கடிதங்களை வழங்கியிருந்தது.

இதற்கமைய இவர்கள் அனைவரும் பருத்தித்துறையிலிருந்து கப்பல் மூலம் திருகோணமலைக்குச் சென்று அங்கிருந்து தீவுப்பகுதிக்குச் செல்வதற்கு கப்பலுக்கு அனுமதி கேட்டபோது சில தமிழ்க் குழுக்கள் அளித்த பதில் இவர்களுக்கு அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் தந்ததாம்.

தீவுப்பகுதியில் ஏற்கனவே தற்காலிகமாக தமது ஆட்கள் பணிபுரிவதாகவும் நீங்கள் அங்கு சென்ருல் அங்குள்ளவர்களின் உத்தியோகம் பறிபோய்விடும் எனக்கூறி திருப்பி விட்டார்களாம். இதனைத் தொடர்ந்து இவர்கள் அனைவரும் வடக்கு கிழக்கு மககாண சபையின் பிரதம செயலாளர், யாழ். அரசாங்க அதிபர் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஆகியோரைச் சந்தித்து உரையாடிய பின்னர் தற்போது யாழ்ப்பாணத்திற்கு திரும்பி வந்துள்ளனர். 71-ரி(

# பிரிட்டிஷ் இணை அமைச்சர் வடக்கு-கிழக்கிற்கும் வருவர்

(கொழும்பு)

இலங்கை வந்துள்ள பிரிட்டனின் வெளிநாட்டு மற்றும் காமன்வெல்த் அமைப்பைச் சேர்ந்த இணை அமைச்சர் திரு. ரொணிபோல்றி வட-கிழக்குப் பகுதிக்கும் விஜயம் செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பகுதிகளில் உள்ள இராணுவமுகாம்கள்பற்றியும்அவர் கேட்டறிவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. புனர்அமைப்பு, புனர்வாழ்வு முயற்சிகளுக்கு பிரிட்டிஷ் உதவிபயன்படும் விதம்பற்றி நேரில் அறிந்து கொள்ளவும் அவர் முயற்சி செய்வார்.

அவர் இலங்கை அரசுடன் நடாத்தவிருக்கும் பேச்சுக்களில் இரு தரப்பு உறவுகள், வர்த்தகம், வெளிநாட்டு முதலீடுகள் என்பன குறித்தும் அக்கறை காட்டுவார்.

வடக்கு-கிழக்கு பகுதிகளில் சமாதானத்தை ஏற்படுத்த புதிய அரசு எடுக்கும் நடவடிக்கைகளில் பிரிட்டிஷ் அரசு ஆர்வம் கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவுத்துள்ளார்.

கொழும்பிற்கு நேற்றுவந்த திரு. போல்றி வெளிநாட்டமைச்சர், வெளிநாட்டுவர்த்தக அமைச்சர் ஆகியோரையும் சந்தித்துப் பேசினர்

## முனை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கி ரவைகள் என்பனவும் அங்கு கண்டெடுக்கப்பட்டன.

நீர்கொழும்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர். பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பொலிஸ் அதிகாரி ஆகியோர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டார்கள்.

பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை தொடர்ந்தும் மேற்கொண்டுவருகிருர்கள். ரி

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1994-ம் ஆண்டு நவம்பர் மாதம் 16-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Nomber B/16336/B.